# <u>பொன்னேரி நகராட்சி</u>
# <u>நகர்மன்ற சாதாரணக்கூட்டம்</u>

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத்தலைவர் திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30.06.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் .

## <u>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u>

### <u>பொருள் எண் 1</u>

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் மே 2023 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மான எண்: 237 நாள்: 30.06.2023

**தீர்மானம்:: மன்றம் அனுமதி அளிக்கிறது.**

### <u>பொருள் எண் 2</u>

அரசாணை ( நிலை ) எண். 10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 23.01.2023 -ன்படி இந்நகராட்சிக்கென நகராட்சி பொறியாளர் பணியிடம் ஒன்று தற்போது தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட குடிநீர்ப்பணி தெருவிளக்கு பணி சாலைப்பணிகள் மற்றும் திட்டப்பணிகளை நாள்தோறும் சென்று ஆய்வு செய்யவும், பொது மக்களிடமிருந்து வரும் புகார்களை உடனுக்குடன் கவனித்து சரி செய்யவும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், திருவள்ளூர், மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களால் நடத்தப்படும் ஆய்வு கூட்டத்திற்கு சென்று வர இந்நகராட்சி பொறியாளருக்கு பொலிரோ (ஈப்பு) வாகனம் ஒன்று ( DGSD ) விலை விகிதத்தில் நகராட்சி பொது நிதியில் வாங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்
(ந.க.எண் 654 /2021/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 238 நாள்: 30.06.2023

**தீர்மானம்: மன்றம் அனுமதி அளிக்கிறது**

## <u>பொருள் எண் 3</u>

பொன்னேரி நகராட்சி பகுதியில் குடிநீர் பைப்லைன் பழுதுபார்ப்பு பணிகள் மற்றும் பாதாள சாக்கடை பணிகள் காரணமாக சேதமடைந்துள்ள சாலைகளை சமன் செய்தல் மற்றும் பொதுசுகாதார திடக்கழிவு மேலாண்மை பணிகளை JCB மூலம் மேற்கொள்ள வேண்டி உள்ளது. வாடகை அடிப்படையில் JCB வாகனத்தை பணிக்கு அமர்த்திக்கொள்ளவும், உத்தேச செலவினம் ரூ.**4.50** இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். /2022 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 239 நாள்: **30.06.2023**

**தீர்மானம் : மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

## <u>பொருள் எண் 4</u>

பொன்னேரி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள காம்பாக்டர் வாகனம் பழுதடைந்ததின்பேரில் பொதுசுகாதாரப்பணிகள் அவசர அவசியம் கருதி டிராக்டர் வாகனம் ஒன்றை வாடகை அடிப்படையில் பணிக்கு அமர்த்திக்கொள்ளவும், தோராய செலவினம் ரூ.**3.25** இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண் **197** நாள் **31.03.2023**ன்படி ஒப்புதல் பெறப்பட்டு **19.04.2023** வரை டிராக்டருக்கான வாடகை தொகை **3,15,000** செலவு செய்யப்பட்டது. மேற்படி டிராக்டர் வாகனத்தை **20.04.2023** முதல் **30.04.2023** பொதுசுகாதாரப்பணிகளுக்கு பயன்படுத்தியமைக்கு கூடுதல் செலவினம் ரூ.**25000/-**யை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 420/2021 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 240 நாள்: **30.06.2023**

**தீர்மானம்:: மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

## <u>பொருள் எண் 5</u>

பொன்னேரி நகராட்சியில் 20 வது வார்டுக்குட்பட்ட அம்பேத்கர் தெரு, ஜவகர் தெரு மற்றும் 24வது வார்டுக்குட்பட்ட நக்கீரன் தெரு ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருவதால், தற்போது சாலைகள் மிகவும் சேதமடைந்து அனைத்தும் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. இதேபோன்று 5வது வார்டு வேணுகோபால் தெருவிலும் மழைகாரணமாக சாலை மிகவும் சேதமடைந்து உள்ளது. மேற்படி சாலைகளை சீரமைக்க வார்டு உறுப்பினர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் தொடர்ந்து புகார்கள் வந்தவாறு உள்ளது. எனவே சேதமடைந்துள்ள மேற்படி சாலைகளையும், தற்காலிகமாக GSB வைத்து சீரமைக்கவும், அதற்காக உத்தேச செலவினம் ரூ.5.50/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 104/2023 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 241 நாள்: **30.06.2023**

**தீர்மானம்:: மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

## <u>பொருள் எண் 6</u>

இந்நகராட்சி சாலையோரக்கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் பெற்ற குத்தகைதாரர் திரு. D. பன்னீர் செல்வம் 2019-20 ஆண்டிற்கு ரூ. **64035** /- ம் , 2020-21 ம் ஆண்டிற்கு ரூ.683563/- ஆகமொத்தம் ரூ. **747598/-**யை செலுத்தாமல் குத்தகை தொகையை நிலுவை வைத்துள்ளார். வண்டிமேடு கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் பெற்ற திரு. மணிமாறன் **2022–23** ம் ஆண்டிற்கு செலுத்தவேண்டிய குத்தகை தொகை ரூ.**950306/-**யை செலுத்தாமல் உள்ளார். பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்கம் வசூலிக்கும் உரிமம் பெற்ற திரு. E. ராஜன் என்பவர் **2022** -23 ம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ. **141845** /- யை செலுத்தாமல் உள்ளார். குத்தகை காலம் முடிவுற்றதால் மேற்படி வரியில்லா இனங்களுக்கான குத்தகை நிலுவை தொகை ரூ.**1839749/-**யை சட்டரீதியாக வசூலித்திட நீதிமன்ற கட்டணமாக ரூ.**54949**/- மற்றும் **3** வழக்குகளுக்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.**15000**/- ஆக மொத்தம் ரூ.**69949**/- யை பொதுநிதியிலிருந்து வழக்கு கட்டணமாக செலுத்தி நீதிமன்ற நடவடிக்கை மூலம் வரியில்லா இனங்களின் நிலுவை தொகையை வசூலித்திட மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 312/2022 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 242 நாள்: **30.06.2023**

**தீர்மானம்: மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

## பொருள் எண் 7

இந்நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளுக்கான மின்கட்டணம் நகராட்சியால் செலுத்தப்பட்டுவருகிறது. அதன்படி சில தெருக்களில் உள்ள மின்கம்பங்களுக்கு மீட்டர் பொருத்திட தமிழ்நாடு மின்சார வாரியத்தை கேட்டுக்கொள்ளப்பட்டதின்பேரில் இந்நகராட்சி பகுதியில் அமைந்த 1. பாலாஜி நகர், 2, பெருமாள் நகர் 3. கோல்டன் சிட்டி, 4, வேண்பாக்கம் பள்ளம், 5, பாரதி நகர், 6.சிங்காரவேலன் நகர் 7. ஆனந்தி நகர் 8. கெஜலட்சுமி நகர் 9. புதுவாயல் சாலை 10. நேதாஜி அவென்யூ 11. கரிகிருஷ்ண பெருமாள் நகர் 12. அன்னை அவென்யூ 13. கணபதி நகர் 14. சங்கர் மாருதி நகர் 15. அப்துல் கலாம் நகர். 16. மூகாம்பிகை நகர் -I 17. மூகாம்பிகை நகர் -II 18. பாலம்மாள் நகர் 19. ஓம் சாய் டவுன்ஷிப் 20. மதினா பள்ளிவாசல் தெரு 21. பாவேந்தர் தெரு 22. விநாயகர் நகர் மற்றும் 23 கண்ணதாசன் தெரு ஆகிய 23 அமைவிடங்களில் மின் நுகர்வு கணக்கீடு செய்யும் மீட்டர் பொருத்த மின் இணைப்பு ஒன்றுக்கு ரூ. 4250/- வீதம் 23 மின் இணைப்புகளுக்கு ரூ. 97750/- ம் , பெருமாள் நகர் மின் இணைப்பிற்கு ரூ.6600/- ம், முத்தமிழ் நகர் மின் இணைப்பிற்கு ரூ.6250/-ம் ஆக மொத்தம் ரூ.110600/- யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வைப்புத்தொகையாக செலுத்திட கேட்பு பெறப்பட்டுள்ளதால் மேற்படி தொகை ரூ. 110600/-யை பொதுநிதியிலிருந்து செலுத்தி மின் மீட்டர்கள் பொருத்திக்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 262/2022 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 243 நாள்: **30.06.2023**

**தீர்மானம்: மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

## பொருள் எண் 8

பொன்னேரி நகராட்சியில் 7வது வார்டு கள்ளுக்கடைமேடு பகுதியில் 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள காரிய மேடையில் ஈமச்சடங்குகள் செய்ய வரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ஆழ்துளை கிணறு மற்றும் கழிவறை ஒன்று அமைக்கவும் , அதற்கான உத்தேச செலவினம் ரூ.7.00/- இலட்சத்திற்கு நகர்மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண்.02/2022 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 244 நாள்: **30.06.2023**

**தீர்மானம்: மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

## பொருள் எண் 9

பொன்னேரி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து நிர்வாக பணிகள் கணினி மயமாக்கப்பட்டதால் தினசரி மேற்கொள்ளப்பட வேண்டிய வரிவசூல் பணிகள், அலுவலகப்பணிகள், திட்டப்பணிகள், தேர்தல் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள பேரூராட்சி பணியாளர்கள் எவரும் இல்லாததால் கணினி தொடர்பான அனைத்து பணிகள் மேற்கொள்ள திருமதி. K.U. ஸ்ரீலக்ஷ்மி என்பவரை டிசம்பர் 2021 முதல் டிசம்பர் 2022 வரை பணிக்கு அமர்த்திக்கொள்ளவும், பொதுப்பணித்துறை விலைவிகிதத்தின்படி ஊதியம் பொதுநிதியிலிருந்து வழங்கிடவும், தனிஅலுவலர் கூட்ட தீர்மானம் எண் 15 நாள் 27.12.2021 ன்படி அலுவலக பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பணியாளர் ஒப்பந்தகாலம் 31.12.2022ல் முடிவடைந்ததன் பேரில் தொட.ந்து அலுவலகப்பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளும்பொருட்டு மேற்படி பணியாளரை நகர்மன்ற தலைவர் முன் அனுமதியுடன் பணி நீட்டிப்பு செய்து 31.05.2023 வரை ஊதியம் வழங்கியதற்கும், ஒப்பந்தகாலத்தை 31.07.2023 வரை நீட்டிப்பு செய்யவும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 677/2021 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 245 நாள்: **30.06.2023**

**தீர்மானம் : மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

## பொருள் எண் 10

பொன்னேரி நகராட்சியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக ஏற்கனவே 10 DBC பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி டெங்கு ஒழிப்பு DBC பணியாளர்களின் ஒப்பந்தம் 31.05.2023 உடன் முடிவடைந்த நிலையில் தற்போது மழைக்காலம் துவங்கியுள்ளதால் 01.07.2023 முதல் 30.09.2023 வரை இந்நகராட்சி பகுதியில் 27 வார்டுகளிலும் டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகளை 10 DBC பணியாளர்களை பணிக்கு அமர்த்திக்கொள்ளவும், செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 341/2022/ அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 246 நாள்: **30.06.2023**

**தீர்மானம்: மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

## பொருள் எண் 11

பொன்னேரி நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சரின் காலை சிற்றுண்டிவழங்கும் திட்டத்திற்காக பொன்னேரி 2 கிராமம் சர்வே எண். 529/2–ல் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சமையற்கூடத்திற்கு சுற்றி பேவர்பிளாக் தரை பதிக்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 7.70/- இலட்சத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் நகர்மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது. .

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 223/2023/ அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 247 நாள்: 30.06.2023

**தீர்மானம்:: அனுமதி வழங்குகிறது**

## பொருள் எண் 12

பொன்னேரி நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சரின் காலை சிற்றுண்டிவழங்கும் திட்டத்திற்காக பொன்னேரி 2 கிராமம் சர்வே எண். 529/2–ல் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சமையற்கூடத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 15.00/- இலட்சத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் நகர்மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

நகர்மன்ற தீர்மான எண்: 248 நாள்: 30.06.2023

**தீர்மானம்:: அனுமதி வழங்குகிறது**

## பொருள் எண் 13

பொன்னேரி நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மின்மோட்டாரின் மூலம் வார்டு எண் 8 மற்றும் 9 ஆகிய வார்டுகளுக்கும் , நகராட்சி அலுவலக கட்டிடம் மற்றும் தற்போது கட்டப்பட்டு வரும் கூடுதல் அலுவலகக்கட்டிடத்திற்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி மின்மோட்டாரை பொதுமக்களின் குடிநீர் விநியோகத்திற்காகவும், அலுவலக பயன்பாட்டிற்காகவும், இயக்கப்படுவதால் மின்மோட்டார் அடிக்கடி பழுதடைகிறது. எனவே நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல் பணி செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.4.20 இலட்சத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர்மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 366/2022/ அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 249 நாள்: 30.06.2023

**தீர்மானம் : அனுமதி வழங்குகிறது**

## <u>பொருள் எண் 14</u>

பொன்னேரி நகராட்சியில் UTIS மென்பொருள் மூலம் வரி மற்றும் வரியில்லா இனங்களுக்கு ரசீதுகள் போடுவதற்கு தேவையான ரசீதுகள் அச்சடிக்கவும், அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பதிவேடுகள் , படிவங்கள், எழுதுபொருட்கள், A4/FS பேப்பர்கள் ஆகியவற்றை விலைப்புள்ளிகள் பெற்று தேவைக்கேற்ப கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. **5.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 122/2022/ அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 250 நாள்: **30.06.2023**

**தீர்மானம் : மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

## <u>பொருள் எண் 15</u>

பொன்னேரி நகராட்சியில் பாதாள சாக்கடை பணிகள் மேற்கொண்டதால் சேதமடைந்த 7வது வார்டுக்குட்பட்ட கள்ளுக்கடைமேடு குறுக்கு தெருவிற்கு பேவர்பிளாக் சாலை அமைக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. **6.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 104/2023/ அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 251 நாள்: **30.06.2023**

**தீர்மானம் : மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

## <u>பொருள் எண் 16</u>

பொன்னேரி நகராட்சி வார்டு எண்கள் **19, 20, 25** ஆகிய நான்கு வார்டுகளை இணைக்கும் டாக்டர் அம்பேத்கர் தெருவில் பாதாள சாக்கடை பணிகள் மேற்கொண்டதால் மிகவும் சேதமடைந்து பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்களின் நலன்கருதி மேற்படி சாலையில் தார்ச்சாலை அமைக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. **45.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 104/2023/ அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 252 நாள்: **30.06.2023**

**தீர்மானம் : மன்றம் ஒப்புதல் வழங்குகிறது**

## பொருள் எண் 17

பொன்னேரி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து நிர்வாக பணிகள் கணினி மயமாக்கப்பட்டதால் தினசரி கணினி வசூல் மையத்தில் வரிவசூல் பணி மேற்கொள்ளவும், பிறப்பு இறப்பு பதிவு செய்தல், பிறப்பு இறப்பு சான்றுகளை கணிணியிலிருந்து பதிவிறக்கம் செய்தல் பணிக்காக இரு கணிணி இயக்குபவர்கள், நான்கு வாம்பே பராமரிப்பவர், ஐந்து பம்பு ஆப்ரேட்டர் மற்றும் ஒரு இரவு காவலர் ஆகியோரை அன்னை அஞ்சுகம் சுய உதவிக்குழுவின் மூலம் டிசம்பர் 2021 முதல் டிசம்பர் 2022 வரை பணிக்கு அமர்த்திக் கொள்ளவும் ஊதியம் பொதுநிதியிலிருந்து வழங்கிடவும், தனிஅலுவலர் கூட்ட தீர்மானம் எண் 16, நாள் 27.12.2021ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டு அலுவலக பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி சுயஉதவிகுழுவின் ஒப்பந்தகாலம் 31.12.2022ல் முடிவடைந்ததன் பேரில் தொட.ந்து அலுவலகப்பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளும்பொருட்டு மேற்படி பணியாளர்களை நகர்மன்ற தலைவர் முன் அனுமதியுடன் பணி நீட்டிப்பு செய்து 31.05.2023 வரை ஊதியம் வழங்கியதற்கும், ஒப்பந்தகாலத்தை 31.07.2023 வரை நீட்டிப்பு செய்யவும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 677/2021/ அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 253 நாள்: 30.06.2023

**தீர்மானம் : ஒப்புதல் வழங்குகிறது**

## பொருள் எண் 18

பொன்னேரி நகராட்சியில் பொதுசுகாதார பணிக்கு தேவையான கிருமிநாசினிகள், புகைபோக்கி கொசு ஒழிப்பு மருந்துகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட குளோரினேஷன் செய்ய பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்பு தூள் , பினாயில், அபேட், இதர பொதுசுகாதார பணிக்கு தேவையான பொருட்களை ஆண்டு ஒப்பந்ததாரரிடம் கொள்முதல் செய்திட தோராய செலவினம் ரூ 5.00 /- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 341/2022/ அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 254 நாள்: 30.06.2023

**தீர்மானம் : ஒப்புதல் வழங்குகிறது**

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.